1982, பிப்ரவரி 15]

பள்ளப்பட்டிக்கு குடிநீர் வழங்கும்திட்டம்,

வினா எண்: 210 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நிலாகோட்டைத் தொகுதி பள்ளப்பட்டியில் குடி தண்ணீர் பிரச்சினை தீர்க்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்காக செலவு செய்துள்ள பணம் எவ்வளவு?

(இ) இவ்வேலை இன்னும் முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: (அ) ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ரூ. 24,939.88 ஆகும்.

(இ) திட்ட ஆய்வுத் தொகையினைக் கட்டாததால் பணியில் தாமதம் ஏற்பட்டது. தற்போதுள்ள விதிப்படி ஆய்வுத் தொகையையும் தோராய மதிப்பீட்டில் சேர்த்துவிட வழிவகை இருப்பதால் களப்பணியாளர்கள் பணிகளைத் தொடரக் கூறப்பட்டுள்ளார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பள்ளப்பட்டி திட்டம் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் ஆய்விலே உள்ளது, ஆய்விலே உள்ளது என்று சொல்லிக் கொண்டு வருவதைப் பார்க்கின்றபோது மிகுந்த வேதனைப்படுகிறேன். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட சிலுக்குவார்பட்டி திட்டத்தோடு இணைத்து பக்கத்திலுள்ள 13 கிராமங்களுக்கும் உடனடியாகத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுத் தொகையை கொடுக்க முடியாத நிலையிலே இருப்பது மிகுந்த வேதனை தரக்கூடிய விஷயம் தான். ஆனாலும் இப்பொழுது அதை, தோராய மதிப்பீட்டிலே சேர்த்து விடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டு விட்ட காரணத்தால் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் தொடங்கி விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பணிகள் தொடங்கி நடைபெறும் போது அதைச்சுற்றி 1/2 மைல், 1 மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமங்களையும் இணைத்து அந்தக் வேலைகளை முடிக்கும் வகையில் செய்யப்படுமா? தேவையானால் அந்த கிராமங்களின் லிஸ்ட் வைத்திருக்கிறேன், தருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே. ஆய்வு எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப்போலத்தான் பணிகள் நடக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து எந்தெந்தக் கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு, ஏதாவது கிராமங்கள் விடுபட்டிருக்குமேயானால், அவைகளைச் சேர்க்க வேண்டும் என்பதைச் சொன்னால், கூடுமானவரையில் அவைகளை சேர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்கலாம்.

நரிக்குடி ஒன்றியப் பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 211 திரு க. பாரமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் நரிக்குடி ஒன்றியம் வாகைக்குளம், புளியங்குளம், பட்டனந்தல் ஆகிய கிராமங்களுக்கு பொதுவாக ஒரு கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் நடப்பு நிதியாண்டில் (1981-82) இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

திரு க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டம் இந்த வட்டாரங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இதனை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 69 ஒன்றியங்களை எடுத்துச் செய்தோம். இப்பொழுது 150 ஒன்றியங்களை எடுத்திருக்கிறோம். அதிலேயே இதுவும் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.